**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு**
**<u>சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்கள் அருளியது</u>**

# <u>பதினெண்சித்தர்</u>
# <u>மடாதிபதிக் குழு</u>



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,**
**ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் சமாது கொண்டருளுபவர்)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 மாசி மாதம்.**

## இந்து இலக்கியக் கழகம்

**<u>வெளியிடுவது:</u> அருதி சங்கராச்சாரியார் பீடம் (பதிவு பெற்றது)**

காணிக்கை: ரூ 10/-

**ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!**

# உள்ளுறை

1. பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு.

2. மதுரை ஆதீனத்திற்கு இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பொருளாளர் விடுத்த மடல்.

3. திருவருட்பணிச் செல்வர் மதுரை ஆதீனம் அவர்கள் சமூகத்துக்குக் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் விடுத்த பரிந்துரை அஞ்சல்.

4. பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவின் சிறப்பு.

---

"வற்று அருளூற்றின் மருங்கமைந்த இனிய
நற்றவக் கனிமலர்ச் சோலையாய இந்துமதம்
பெற்ற குழந்தையாம் செந்தமிழர் அன்னையை
விற்றும் மாற்றார்க் கடிமையுறுத்தியும் இழிந்தனரே;
பெற்றவரைப் பேணாப் பழியேயிவர் அழிவானது;
கற்றார் இந்துமதத் துறையெல்லாம் குருவாவதில்லை;
வேற்றார் மாற்றார் போற்றிக் குருவை ஏற்றார்;
இற்றார் நற்றமிழர்; அற்றார் பாரம்பரிய வீரியம்;
உற்றதுணர்ந்து இவர் திருந்த உழைப்போம்;
கற்பிக்கக் குருபாரம்பரியமுண்டு;
கதிரவனால் காரிருள் அகன்றிடும்.

- வழங்கியவர்

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**//உண்மை நகல்//**

**//சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்கள் குருதேவருடன் தலைமைப்பீடத்தில் இருந்த போது எழுதிக் காத்திட்ட குறிப்பேட்டில் இருந்து எடுக்கப்பட்டது.//**

# அறிவிக்கை எண்: 7777

# பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு

## பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவில் உள்ள அருட்பட்டத்தவர்களின் அருட்பட்டங்களுக்குரிய விளக்கம்.

1. **மடாதிபதி** :-

மடம் = இளமை;
அதி = வளர்ந்து கொண்டே போவது; அழியாதது;
பதி = தலைவன்;

அதாவது ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றும் மாறுத இளமையோடு, குறிப்பிட்ட கோயில் கடவுளோடு சேர்ந்து தலைமை பெற்று விளங்கிடும்.

2. **பீடாதிபதி** :-

குறிப்பிட்ட கடவுளின் இருக்கை. மேற்குறிப்பிட்டுள்ள ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் அந்த இருக்கையில் அதிகம் வளர்ந்து கொண்டே போய், அந்தக் கடவுளாகவே மாறி செல்வாக்கு வளர்ந்து கொண்டே போவதாகும்.

3. **சன்னிதானம்** :-

குறிப்பிட்ட கடவுளாகவே வாழுதல்;
அவருடைய பதிலியாக அருளைத் தானமாக வழங்குவது.

4. **ஆதீனம்** :-

குறிப்பிட்ட கடவுள், அவரைச் சார்ந்த அருள் உலகம், பொருள் உலகம் அனைத்தையும் தனதாக்கிக் கொள்ளுதல், ஆதீனப்படுத்துதல்.

5. **<u>தம்பிரான்</u>** :-

தலைவன், குறிப்பிட்ட கடவுளின் தலைவன், குறிப்பிட்ட கடவுளுக்குத் தோழன், குறிப்பிட்ட கடவுளுக்குத் தொண்டன்; குறிப்பிட்ட கடவுளாகவே மாறுதல்.

6. **<u>பண்டாரம்</u>** :-

கோயிலைச் சார்ந்த சொத்துக்கள் அனைத்துக்கும் முழு உரிமை பூண்டு, அருளை மாலையாக அணிந்து கொண்டு; அருளைப் பிறருக்கும் மாலையாக அணிந்து கொள்ள வைப்பவர்.

பண்டம் = அருள் பண்டம்,
ஆரம் = மாலை.

7. **<u>பண்டார சந்நதி</u>** :-

அருள் ஆறுக ஓடுகின்றவர்.

8. **<u>பண்டார சந்நிதி</u>** :-

அருளை செல்வமாகப் பெற்றிருப்பவர், வழங்குபவர்.

9. **<u>அரிய வாள்</u>** :-

அரிய = அருமை நிறைந்த;
வாள் = துன்பங்களை வெட்டிக் களையும்;
துரோகிகளை, எதிரிகளை, துன்பங்களை வெட்டி வீழ்த்தும் அருமையான வாள் போன்ற அருளாளர்கள்.

10. **<u>கூரிய வாள்</u>** :-

கூர்மையான வாள்; அருளுலகில் கூர்மையான வாள்; அருளாற்றலில் கூர்மையான வாள்.

11. **<u>சீரிய வாள்</u>** :-

சிறந்த வாள்;

சீர்மை - சிறந்த வடிவமுடைய வாள்,
- சிறப்புடைய வாள்.

12. **<u>பெரிய வாள்</u>** :-

அருளாற்றலில் பெருமையும் பேராற்றலும் கொண்டு செயல்படக் கூடிய வாள்.

13. **<u>நேரியவாள்</u>** :-

அருளுலகில் நேர்மையை நிலைநிறுத்துவதற்காக நேரிடையாகப் போரிட்டு வெற்றியைப் பெறுவதற்கு உதவுகின்ற நேர்த்தியான வாள்.

நேர்த்தி = மற்றதோடு ஒப்பிடுவதற்குச் சிறந்தது.

14. **<u>வீரிய வாள்</u>** :-

எதிரிகளை அழிப்பதோடு நல்லவர்களுக்கு வீரத்தைத் தருகின்ற வாள்.

தானும் வீரமாக இருந்து பிறருக்கும் வீரத்தைத் தருகின்ற வாள் போன்றவர்கள்.

15. **<u>ஏமகோடிப் பீடம்</u>** :-

ஏமம் = சுடுகாட்டுத் தீ; சிவன்;

வாழ்வின் முடிவான இறப்பிலும் சோதிநிலை (ஒளி நிலை) பெற்றுத் தரக்கூடிய சித்தியைத் தரக்கூடிய பீடம், பீடாதிபதி.

16. **<u>காமகோடிப் பீடம்</u>** :-

'உலகியலாக உண்டாகக் கூடிய அனைத்து வகையான ஆசைகளும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையே; எதையும் அடக்கவோ, துறக்கவோ, மறக்கவோ, மறுக்கவோ, வெறுக்கவோ தேவையில்லை. இயல்பான இல்லற வாழ்க்கை வாழ்வதுதான் சிறந்தது' என்ற சித்தர்நெறியை குறிப்பிட்ட கடவுளின் பதிலியாக

இருந்து விளக்குகின்றவர்கள். (மனைவி மக்களோடு இருந்து விளக்குபவர்கள்தான் காமகோடி.)

17. **சோமகோடிப் பீடம்** :-

சோமம் = தெய்வீகத் தீ. இது முருகனுக்கு உரியது.

முருகன் - போர்ப்படைத் தளபதி, சேனாதிபதி; அதாவது போர்க்குணம் உடைய அனைத்து வகையான கடவுளர்களையும் குறிக்கக் கூடியது. எனவே, அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புக்களுக்காகப் போராடக் கூடிய பீடாதிபதி.

சோமத் தீ அதிகமாகவும் கூடாது; குறையவும் கூடாது. இளமையாக இருக்க வேண்டும். யாராலும், எதனாலும் குறைக்கவோ, மறைக்கவோ, அதிகமாக்கிடவோ முடியாத ஒன்று. நிலையாக இருக்கும். எப்பொழுதும் வெற்றி தரக்கூடிய தீயாக, கடவுளின் ஆற்றலாக, குறிப்பிட்ட கடவுளின் பதிலியாக வாழலாம்.

18. **வாமகோடிப் பீடம்** :-

மிகக் குறுகியதாக, சிறியதாக, நெற்றிக்கண் போன்றது. புருவமையத்திலிருந்து ஒளிவிட்டுக் கொண்டிருப்பது. விளக்கின் சுடர் போன்றிருப்பது. இந்த வாமத்தீ எப்பொழுது வேண்டுமானாலும் விசும்பளந்த அகண்டப் பெருந்தீயாக மாறும்.

வாமனம் திருவிக்கிரமனாக (திருவிக்கிரமன் = விசுவரூபம்) பேருருக் கொண்டு செயல்பட்டது போல்; சிவபெருமான் நெற்றிக் கண்ணிலுள்ள தீ திரிபுரத்தை எரிக்கக் கூடியதாக பேருருக் கொண்டது போல்; மிகப்பெரிய வடிவம் பெற்று செயலாற்றக் கூடிய வல்லமை பெற்றது வாமத்தீ.

எனவே, இது பயிற்சியால் குறிப்பிட்ட கடவுளை எப்பொழுதும் தன்னுடைய நெற்றிக் கண்ணில் வைத்திருப்பது. இந்த வாமகோடிப் பீடம் கண்ணைத் திறந்து பார்த்தாலும் சரி,

கண்ணை மூடி நினைத்தாலும் சரி, நினைத்தது நடக்கும். அவ்வளவு பெரிய சித்திநிலை உடையது வாமசித்தி.

கோடி = எல்லை, பெரியது, முழுமையானது, பேராற்றலை உடையது, ..... என்று 14 சொற்களில் பொருள் சொல்லப்படுகிறது. எனவே ஏம, காம, சோம, வாம என்ற நான்கும்தான் நான்வேதங்களாக இருக்கின்றன.

வரிசையாகச் சொன்னால்,

இருக்குவேதம் = ஏமகோடிப் பீடம்.
அசுர வேதம் = காமகோடிப் பீடம்.
யாம வேதம் = சோமகோடிப் பீடம்.
அதர்வான வேதம் = வாமகோடிப் பீடம்.

<u>தொகுத்தவர்</u>:
தலைமைப்பீட ஓலைநாயகம்
சித்தரடியார் சீனிவாசன்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: கையெழுத்துப் பிறதி நகலாகவும் தட்டச்சு நகலாகவும் கிடைத்தது.//**

*மேலும் விளக்கங்களை* ***அருட்போர் ஆயத்தப் பணி அருளாணை*** *அஞ்சலில் (25/08/1992இல் எழுதப்பட்டது) தெரிந்து கொள்ளலாம்.*

# <u>மதுரை ஆதீனத்திற்கு இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பொருளாளர் விடுத்த மடல்.</u>

பொன்னேரி
29.6.83

அன்புமிக்க மதுரை ஆதீனம் அவர்களுக்கு,

1) 'இந்து மறுமலர்ச்சி இயக்க'த்தின் பொருளாளர் அருள்மிகு அங்காளபரமேசுவரி சன்னிதானம் வரையும் மடல்.

2) அண்மையில் தங்களுக்கு ஏற்பட்ட இடரைப் பத்திரிகையின் வாயிலாகவும், வானொலியின் வாயிலாகவும் கேள்வியுற்று மிக்க துயரடைந்தேன். இந்துமதத்தின் பிறப்பிடமாகவும், தாயகமாகவும் இலங்குகின்ற தமிழ் மண்ணில் மூன்ருந்தர அரசியல்வாதிகளால் தாங்களும் தங்களைப் போன்ற மதவாதிகளும் தாக்குறுவதை உணர்கின்ற போது; இந்தத் தமிழ் மண்ணில் **'சமயம் ஆட்சியை நடத்தி வந்த காலம்'** சென்று பின் **<u>'மதம் வேறு, ஆட்சி வேறு என்ற நிலை பிரியத் துவங்கிய போதே நாட்டில் பத்தி இயக்கமும், மக்கள் இயக்கமும் பாழ்படத் துவங்கின</u>'**. அதற்கான விளக்கத்தை இன்றைய தினம் கண்ணுற முடிந்தது. மதவாதிகள் தாக்கப் படுவதை உணர்கின்ற போதுதான், அரசியல்வாதிகள் ஆன்மீகத் துறையில் நடத்துகின்ற போலித்தனம், கூலித்தனம், கயமைத்தனம் நன்கு புலனாகின்றன.

இந்நிலை வடநாட்டில் நடைபெற்றிருக்குமேயானால் ... ? ஏன் அண்மையில் பஞ்சாப்பில் பொற்கோவிலுக்குள் குற்றவாளி இருந்தும்

கூட அரசு இயக்கத்தால் ஒன்றும் செய்யமுடியவில்லை என்கின்றபோது; இந்தத் தென்னாட்டில் ஆன்மீகவாதிகளின் அவலநிலையை உணர்கிறோம். இதற்குக் காரணம் நம்முடைய நாட்டில் நம்முடைய மதத்திற்கு நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பு (Organization, Administration and Construction) இல்லாமல் போனதுதான், இன்றைய ஆன்மீகவாதிகளின் அவல, கேவல நிலைகளுக்குக் காரணம். இனிமேலாவது இதனை அனைவரும் உணரவேண்டும்.

3) இன்றைய தினம் ஒவ்வொரு மடாதிபதியும், ஆதீனமும் சுயமாகப் பொறுப்பின்றி மக்களைச் சந்திக்காமல் தனித்தனி வட்டங்கள் அமைத்துத் தங்களுக்குள்ளாகவே வாழ்ந்து வருகின்றனர். இளைஞராகிய தாங்கள், பட்டம் பெற்ற தாங்கள், பத்திரிகைத் துறையில் அனுபவம் பெற்ற தாங்கள், ஆதீனப் பொறுப்பு ஏற்றவுடன் எங்களின் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் எங்களை 1980ஆம் வருடம் ஏப்ரல் மாதம் ஆறாம்தேதி அன்று தங்களைக் கண்டு உரையாடி வரும்படி பணித்தார். அவ்வண்ணமே யானும், சித்தரடியாராகிய திரு சோ.இரவீந்திரனும் அன்றைய தினம் தங்களைக் கண்டு பேசினோம். அப்பொழுது நாங்கள் வலியுறுத்திய கருத்தைத்தான் இன்றளவும் நாங்கள் செயல்படுத்தி வருகின்றோம்.

4) மதவாதிகள் மட்டுமே மக்களின் குறைநிறைகளை உற்று உணர்கின்ற வாய்ப்பும், வசதியும் பெற்று உள்ளனர்; நேரடியாக மக்களைச் சந்திக்கின்ற அமைப்பைப் பெற்று உள்ளனர். இன்றைய போலி அரசியல்வாதிகளின் தரமற்ற நடவடிக்கைகளால் ஒவ்வொரு கோயிலாகப் பாழடைந்து வருவது மட்டுமின்றி மக்கள் மத்தியில் பத்தியுணர்வும் தளர்ந்து வருகின்றது. இதனாலேதான், நாட்டில் நாள்தோறும் எண்ணற்ற பிறச்சினைகள் உருவெடுத்து வருகின்றன.

5) இந்தநிலே மாறிட; தேக்கநிலே நீங்கிட; தமிழ்மொழியும், இந்துமதமும் தழைத்தோங்கிட ஒரு மாபெரும் முயற்சியை நம்முடைய காலத்திலாவது உருவாக்க வேண்டும் நாம். அதற்குரிய பொறுப்பும், பொறுமையும் நமக்கு வேண்டும். இனிமேலாவது, ஆங்காங்குள்ள தெய்வீகச் சிந்தனேயாளர்கள், தெய்வீகத் துறையாளர்கள், தெய்வீக நெறியாளர்கள் பிரிந்தோ, திரிந்தோ கிடக்காமல் இணேந்து முனேந்தால்தான், மக்களுக்கு பத்திநெறிக்கு ஆதரவாக ஒரு பிடிப்பும் உறுதியும் கிட்டிடும் அல்லது வளர்ந்திடும்.

6) ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறாராகிய எங்கள் குருதேவர் பெரிதும் முயன்று அண்மைக் காலத்தில் 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை'ப் பதிவு செய்து தம்மை நாடி வரும் அனேவரையும் ஏற்று பத்திநெறிக்கு இட்டுச் செல்கிருர். அதற்குரிய பயிற்சிகளேயும், முயற்சிகளேயும் தந்து முறையாக வழிநடத்திச் செல்லுகின்ருர்.

7) எங்கள் குருதேவர் பதினெட்டு ஆண்டுக்காலம் பயிற்சிகளிலும், பதினெட்டு ஆண்டுக்காலம் முயற்சிகளிலும் செலவழித்துச் சமயத் துறையில் ஆழ்ந்த பயிற்சிகள் பெற்றும்; மார்க்சீயத் தத்துவங்களில் ஈடுபாடு உற்றும், இன்றைய காலக்கட்டத்தில் இந்துமதத்திற்கு ஏற்பட்டுள்ள தாழ்ச்சிகளேயும், வீழ்ச்சிகளேயும், சூழ்ச்சிகளேயும் கண்டு வாளா இருக்கக் கூடாது என்று நினேத்தும்... அல்லும் பகலும் அயராது நேரிலும், மடல்களிலும் பற்பல ஆன்மீக நெறியாளர்களேச் சந்தித்தும், மத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்ருர். ஆனுல், இதுகாறும், நமது தமிழகப் பத்தித் துறைத் தலேவர்கள் இணேந்த பாடில்லே. இந்த நிலே தொடர்வதால்தான் கட்டுப்பாடும், ஒழுங்கமைப்பும் மிகுந்த நிறுவன நிர்வாக அமைப்பு உருவாகவில்லே. எனவேதான், தமிழக ஆன்மீகவாதியை தெரு நாயைப் போல கேட்பாரற்ற முறையில் துன்புறுத்தும் அளவிற்கு தமிழக அரசியல்வாதிகள் துணிந்து விட்டார்கள். அதிலும், தமிழ்மொழி

வழிப்பட்ட, தமிழின மதத் தலைவர்களுக்கு தமிழக அரசியல்வாதிகளாலும், சமுதாயவாதிகளாலும் பழிகளும், இழிவுகளும் தொடர்ந்து விளைவிக்கப் படுகின்றன. இதே அந்தத் திருச்செந்தூர் மேடையில் 'காஞ்சிப் பெரியவாள்' இருந்திருந்தால் அந்த அமைச்சர் அங்ஙனம் நடந்திருப்பாரா? அந்த அளவிற்கு சைவநெறியாளர்கள் கட்டுக்கோப்பு இழந்து கிடக்கின்றனரா?

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் படித்த இளைஞர்கள் பல்லாயிரம் பேர் உள்ளனர். இவர்கள் இந்துமத நெறிகளைப் பகுத்தறிவுப் போக்கில் ஆராய்ந்து, அன்றாட மானுட வாழ்வில் பயன்படுத்துகின்றனர். இதற்காகவே, எங்களது குருதேவர் அனுபவப் பூர்வமாக இளைஞர்களைக் கொண்டு இந்துமதத்தை எளிமைப்படுத்தி; மறைத்தும் மறைந்தும், திரித்தும் திரிந்தும் உள்ள நமது நெறிகளின் தத்துவங்களை முறைப்படுத்தியும், முழுமைப்படுத்தியும் வருகின்றார். அவரின் எண்ணமெல்லாம் நல்லதொரு வலுவான இயக்கம் ஒன்று உருவாகி மாநிலந் தழுவியாவது உடனடியாகச் செயல்பட வேண்டும் என்பதேயாகும். இந்த இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு விஞ்ஞான வளர்ச்சிகளைக் கண்டும், நாம் இந்துமத நெறிகளை மூடிமூடி மறைத்துப் பேணிக் காப்பதில் யாது பயன்? இதை மாற்றவே இந்துமத மரபுகளை, தத்துவங்களை, முறைகளை, மறைகளை, நெறிகளை, வேதங்களை நேரடியாக அனுபவப் பயன்களாக மக்களைச் சென்றடையும் வண்ணம் நாளும் பொழுதும் தொண்டாற்றி வருகின்றார் எங்களது குருதேவர்.

8) முதலாவதாக, இந்துமத நெறியாளர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். குறைந்தது தாங்களாவது எங்களோடு இணைந்தோ, நாங்கள் உங்கள் கீழாக இயங்கியோ செயல்படத் துவங்க வேண்டும்.

9) இரண்டாவதாக, ஒரு பேரவையைக் கூட்டி ஆலயங்கள், கோயில்கள், சிற்றூர் வழிபாட்டு நிலையங்கள்... முதலியவை இயங்கும்

முறைகளையும், பூசாவிதிகளையும் தொகுத்து வெளியிட்டுப் பத்தி நெறியாளர்களையும், பத்திநெறித் தலைவர்களையும் ஒன்றிணைக்க வேண்டும்.

10) மூன்றாவதாக, 'பத்தி இயக்கம்' மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான், ஆன்மீகத் துறையும் நாட்டில் அவசியமான, தேவையான ஒரு துறையே என்று அனைவரும் உணர்வர். இதன் வளர்ச்சியின் மேல்தான் சமுதாய கட்டமைப்புக்கள் வாழ்ந்தன, மலர்ந்தன, வளர்கின்றன. மேலும், அனைத்துப் பொருளுலக இருள்களையும், இன்னல்களையும், ஏமாற்றுக்களையும், கொடுமைகளையும், அநீதிகளையும் ... அகற்றிச் **'சமத்துவச் சமாதானச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாய நிலைகளை'** அருளாட்சி மூலம்தான் உருவாக்க முடியும்.

"... சாதிமத வெறிகளையும், தொழிலாளி முதலாளி மோதுதல்களையும், கள்ளச் சந்தைக்காரர்களையும், ஊழல்களையும், சர்வாதிகாரக் கொடுமைகளையும் ... அடியோடு ஒழிக்க முடிவெடுத்துச் செயல்படும் வலிமையும், வளமையும், வாய்ப்பும், உரிமையும், திறமையும், தீரமும், வீரமும் மதவழி இயங்கும் அமைப்புக்குத்தான் உண்டு...." [இ.ம.இ. கொள்கை] என்ற திடமான கருத்தினைக் கொண்டு இயங்கும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் இன்றில்லை என்றாலும் விரைவில் வெளிப்போந்து உலக மக்கள் பின் தொடரக் கூடிய அளவில் வெற்றியாகச் செயல்பட்டிடும்.

ஏனெனில், இந்துமத உணர்வுகளில், நெறிகளில், முறைகளில் ... பற்று வைத்துள்ள மாந்தர்களைத் தேடிப் பிடித்து அடியான்களாகப் பயிற்சி ஈந்து, புத்தபிட்சுகளைப் போல நாடெங்கும் செயலாக்கம் புரிய நாள்தோறும் இப்பாசறை செயல்பட்டு வருகின்றது. எனவே, தங்களைப் போன்ற அமைப்புள்ள ஆதீனங்கள் எங்களை வெளியுலகிற்கு

அறிமுகப் படுத்தினுலோ, அன்றி பகிரங்கமாக அறிவித்து ஏற்று வழிநடத்தினுலே போதும்; மத ஆர்வலர்களும், மதப் பற்றுளர்களும், கட்சி அமைப்பால் தாழ்ந்து போன, இழிந்து போன, நைந்து போன, தலைமைகளில் நம்பிக்கை இழந்து போன, ஊழல்களால் வெறுப்புக்குள்ளான தொண்டர்களும், மக்கள் திரள்களும் நம்மோடு ஒன்றிணைவர்.

ஏனெனில், ஒவ்வொரு இந்தியனுக்குள்ளும் ஒவ்வொரு கோயிலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. வெளியே எவ்வளவு நாத்திக வீரம் பேசினுலும், பத்தியைப் பொறுத்த வரையில் அனைவருக்குமே கருத்து மாறுபாடுகள் இருக்கவே முடியாது. புண்ணியத் தலங்கள் பல கொண்ட இம்மண்ணில் பத்தி இயக்கம் என்னும் விதை சிறந்தோங்கி வளரும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

11) நான்காவதாக, இந்து மதத்திற்கு என்று விரும்பிப் படிக்கும் வகையில் பத்திரிகையொன்று தேவை. அது, வெறும் சடங்குகளைப் பற்றி விவரிக்காமல் வாழ்வியல் நடைமுறைகளைத் தெரிவிப்பதாக இருக்க வேண்டும். எல்லோரும் அருளாளராக தேர்ச்சி பெறுவதற்கு வழிவகைகளை வழங்குவதாகவும் இருக்க வேண்டும்.

12) இனிய இளைஞரே! அறமிகு பணியை ஆர்வத்துடன் ஏற்றுச் செயல்படும் வல்லாரே! வாழ்க நீவிர்! தாங்கள் துன்புற்றதைக் கண்டு எம் குருதேவர் மிக்க துயரடைந்தார், கலங்கினுர். ஏனெனில், விண்முட்டக் கோபுரங்கள் கட்டி வெண்முகிலைக் கொண்டு நாடோறும் ஆராதித்து வளர்த்துப் போற்றிய திருநாட்டில் மதுரை ஆதீனம் தாக்குண்டார் என்பது ஒவ்வொரு இந்துவுக்கும், ஒவ்வொரு தமிழனுக்கும் கிடைத்திட்ட பேரிடியாகும். இந்நிலை, இப்படித் துவங்கினுல் நாளை ஒவ்வொரு குடிமகனுக்கும், மடாதிபதிக்கும், ஆதீனத்திற்கும், பீடாதிபதிக்கும், சன்னிதானத்திற்கும், கோயில் செல்லும் பத்தருக்கும் என்ன பாதுகாப்பு கிட்டிடும்? என்று

நினைக்கவே அச்சமாக உள்ளது. எனவே, எம் குருதேவரின் எண்ணங்களும், வண்ணங்களும், திண்ணங்களுமாகி இம் மண்ணுலகில் அருளாட்சி அமைத்திட தாங்கள் இரும்பு மனத்தோடு இருகரங் கொண்டு உதவிடுவீர்!

13) தங்களுக்கு ஏற்பட்ட இதேநிலை, ஒரு கிறித்துவப் பாதிரியாருக்கோ, முகம்மதியச் சமயத் தலைவருக்கோ ஏற்பட்டு இருக்குமேயானால் நம் நாட்டில் இந்த நேரம் இரத்த ஆறு ஓடியிருக்கும் அல்லது ஒரு மாபெரும் போராட்டம் கொந்தளித்திருக்கும். ஆனால், பாரம்பரியம் மிக்க மதத்துறையில் செயலாற்றும் தங்களுக்காகப் போர்க்கொடி தூக்கவோ, கண்டனம் தெரிவிக்கவோ, கேவலம் அனுதாபம் தெரிவிக்கவோ இந்த நாட்டில் எந்தத் தம்பிரானும், மடாதிபதியும், சன்னிதானமும், ஆதீனமும் தயாராகவில்லை. என்னைப் போன்ற எண்ணற்ற மக்கள் கொதித்தெழுந்த போதிலும் செய்வதறியாது (எந்த முறையில் நின்று போர்க்கொடி தூக்குவது என்று புரியாமல்) விழிக்கின்றனர். இதற்குக் காரணம், நம்முடைய மதத் தலைவர்களிடையே காணப்படும் வேற்றுமைதான். இந்தக் கேவலமான நிலைகளை எண்ணியாவது தாங்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள் என்று நம்புகிறோம். அதாவது இனிமேலாவது நமது தமிழகத்தில் மதவழிக் கட்சி வலிமை பெற்றிட, தங்களைப் போன்றோர் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பெரிய முயற்சியில் இறங்கிடல் வேண்டும்.

14) தங்களால் முடியவில்லையென்றால் போர்ப்பயிற்சி பெற்று, பாசறையமைத்து, பாடிவீடு கட்டிப் போராடிச் சமயப் பகைகளை தகர்த்தெறியத் துடித்துக் கொண்டிருக்கும் எங்களின் அருள்நெறி திருக்கூட்டத்திடம் அப்பொறுப்பை ஒப்படைத்தால் போதும். இந்த அரசியல்வாதிகளின் கொட்டங்கள், ஏமாற்றுப் பித்தலாட்டங்கள்,

மோசடிகள், நாத்திக வேடங்கள் ... உள்ளிட்ட அனைத்தையும் சமாளித்து விடுவார்கள்.

இந்த நாட்டில் அரசியல் தெரியாதவன், வரலாறு தெரியாதவன், பண்பாட்டினை அறியாதவன், மதநம்பிக்கைகளை அறியாதவன் ... நாட்டை ஆளுவதே வழக்கமாகி விட்டது. கடந்த காலத்திலும் சரி, நிகழ் காலத்திலும் சரி; படித்தவர்கள், உலகியல் தெரிந்தவர்கள், இயற்கை வளங்களை நிர்மாணிக்கத் தெரிந்தவர்கள் இந்த நாட்டை ஆளவில்லை. கேவலம் போலி உணர்வுகளை வடிவப்படுத்தி வாழ்க்கை வசதிகளை தேடுபவர்களே இந்த நாட்டை ஆளுகின்ற அலங்கோல அவல நிலையே அடிக்கடி ஏற்படுகிறது. இதனை மாற்றியே ஆக வேண்டும். ஆனால், அது எளிதல்ல. ஏனெனில், இந்தியாவின் உயிரோட்டமான பத்தி இயக்கத்தின் நாடிகளைத் தொட்டுப் பார்ப்பவர்கள் மத அறிவோ, அனுபவமோ இல்லாதவர்கள்தான். காற்றடித்தால் எச்சிலை கோபுரத்தின் மேல் ஒட்டிக்கொண்டு நிற்பது போல், அரசியல் வாழ்க்கையை வாழ்ந்து வரும் போலிகள் பத்தி மார்க்கத்தார்களைக் கண்டு எக்களிப்பது வேதனையுறத் தக்கது; வெட்கப்படத் தக்கது; இதனை நிலவைப் பார்த்து ஊளையிடும் நரியின் செயலுக்கே ஒப்பிடல் வேண்டும்.

15) பேரன்புமிக்க ஆதீனம் அவர்களே! மற்றையோர்க்கு ஒழுக்கத்தையும், நேர்மையையும் போதிக்க எந்த விதத்திலும் தகுதியற்ற அரசியல்வாதிகள், அரசியலில் ஆன்மீகத்தார்கள் இறங்கக் கூடாது என்று கூறுவது வேடிக்கையாக மட்டுமல்ல, வேதனையாக இருக்கிறது. இந்த நாட்டில் சட்டத்தின் பெயரால், சம்பிறதாயத்தின் பெயரால், மரபின் பெயரால், பதவியின் பெயரால், அதிகாரத்தின் பெயரால் சுதந்திரச் சிந்தனையாளர்களை வளரவிடாமல், வாழவிடாமல் ஏதேச்சாதிகாரச் சத்திகள் ஓங்கி வருகின்றன. பணத்திலும், பணக்கார வர்க்கத்திலும் ஊறித் திளைத்து வருகின்ற அரசியல்வாதிகள் தமக்கென்று

ஓர் அமைப்பை, கட்சியை, இயக்கத்தை வளர்த்து மக்களை, சமுதாயத்தைச் சுரண்டிச் சுகமாக வளரும்போது; தட்டிக் கேட்க, திரண்டெழ மற்றைய துறை வல்லுனர்களுக்கு உரிமையில்லையா? திறமில்லையா? அன்றி முடியாதா? கூடாதா? அரசியல்வாதிகளின் ஆதரவுக்கு கெஞ்சுபவர்களாகவே பெரும்பாலானவர்கள் இன்று உள்ளனர்.

16) ஒவ்வொரு குடிமகனுக்கும் தனக்குள்ள உரிமைகளைப் பெற்றுக் கொள்ள, எடுத்துக் கொள்ள, தொடுத்துக் கொள்ள பூரண உரிமை பெற்றிருக்கும்போது; மதத் தலைவர்கள், தங்களது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதில் தப்பேதுமில்லை. <u>எந்த நாட்டின் வரலாற்றை எடுத்து நோக்கினாலும் சரி; ஆட்சியாளர்கள் அறிவிழந்து, ஆணவத்தால், அதிகாரப் போக்கால், கட்டவிழ்ந்து செயல்படுகின்ற தருணத்தே தட்டிக்கேட்டு, கூறுகெட்ட மதியாளர்களை தரைமட்டமாக்கிய செயல்களில் முக்கிய பங்கு வகுத்தது மத அமைப்புக்கள்தான்.</u> அவர்கள் எந்தநேரத்திலும் மக்களின் பாதுகாப்புக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் வெகு அருகாமையில்தான் இருந்து வருகின்றனர். அவர்கள், <u>ஆட்சியின் தவறுகளை அவ்வப்போது தட்டிக் கேட்கத் தயங்கியதாலும், மயங்கியதாலும், கூசியதாலும்தான் அரசியல்வாதிகள் **'தான்'** என்ற அகம்பாவ உணர்ச்சியில் உச்சியில் உள்ளனர்</u>. இதனால்தான், இன்றைய தினம் ஆதீனம் பெரும் அவமதிப்புக்கும், பெருத்த இழிமொழிகளுக்கும் இலக்காக வேண்டியதாகி விட்டது. இதுவே ஒரு RSS இயக்கத் தலைவரையோ, ஓர் அகாலிதளத் தலைவரையோ குறைகூறி இருந்தால் இந்த அமைச்சர், அல்லது அமைச்சரவையே இந்நேரம் உருத் தெரியாமல், உருவந் தெரியாமல் சிதறிச் சீரழிந்து போயிருக்கும்.

17) மகாத்மா காந்தியடிகள் கூட தன்னைக் கடைசிவரை பத்தி மார்க்கத்தில் தொண்டனாக்கிக் கொண்டுதான் விடுதலைப் போராட்டத்தை

வெற்றிகரமாக்கிக் காட்டினர். அந்த மாபெரும் இயக்கம் வாரிசில்லாமல், வடிவமில்லாமல் போனதுதான் அக்கட்சி கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் இழந்து நாட்டினை அழிவுப் பாதையில் தள்ளி வருகின்றது. இந்த நிலை, இந்த நாட்டின் சொந்த நிலை ஆகிடாமல் வந்த நிலை என்று விரைவில் மறைந்திட இக்கணம் முதலே முயலவேண்டும் நம்மைப் போன்றோர். ஏனெனில், காளான்களும், செல்லுப் பூச்சிகளும், அந்துப் பூச்சிகளும் இந்திய உணர்வை, இந்துமதத்தை, தமிழ்மொழியை செல்லரிக்கத் துவங்கி விட்டன. இன்னமும் சிங்கங்களும், வேங்கைகளும், களிறுகளும், காளைகளும் பகல் தூக்கம் தூங்கிக் கொண்டு இருந்தால் என்றென்றும் கொள்ளையரும், கொடியவரும், ஏமாற்றுக்காரரும், ஊழல் பேர்வழிகளுமே நாட்டை ஆளவும், வழிநடத்தவும் நேரிட்டு விடும். அதனால் எங்கும் இருள், எல்லாமே இன்னல் என்ற நிலையே ஏற்பட்டிடும்.

18) சைவமும், வைணவமும் தழைத்தோங்க; சமய உணர்வுகள் செழித்தோங்க ஆலயங்களிலும், கோயில்களிலும் நாதமணி ஒலிக்க வேண்டுமெனில் அரசியல்வாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிக்க மத அமைப்பாளர்கள் ஒன்றிணைந்தே ஆக வேண்டும். இன்னும் ஆட்டுக் கூட்டம் போல் பிரிந்து கிடந்தால்; வேட்டை நாய்கள் வெறி கொண்டு தாக்குவது எளிது! எளிது! எளிது!

19) இப்படி நான் எழுதுவது உங்களின் மூலம் மதவெறியைத் தலைவிரித்தாட வைக்க வேண்டும் என்ற நோக்கில் அல்ல. என்னுடைய நோக்கமெல்லாம் தமிழினத்தின் தந்தை ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் “அரசியல்வாதிகள் எல்லோரும் அயோக்கியர்களே”, “பொறுக்கித் திங்கவே அரசியலுக்குப் போகின்றார்கள்”, “பொய் பேசுகின்றவனுக்கும் பித்தலாட்டக்காரனுக்கும்தான் அரசியல் தேவை”, “அரசியல் ஏமாற்றுகின்றவர்களுக்குத்தான் பயன்படுகிறது”, “மக்களைத் திருத்தனும்னு

நினைக்கிற எங்களைப் போன்ற சமுதாயவாதிகளால்தான் எதையும் செய்யமுடியும்...” என்று கூறிய வாசகத்தை மட்டும் இங்கே தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஏனெனில், தாங்கள் அரசியல்வாதிகளால்தான் நேரடியாகத் தாக்கப்பட்டு துன்புறுத்தப் பட்டுள்ளீர்கள். இந்தத் தாக்குதல் உங்களைப் பொறுத்தவரை இறுதியானதாக இருந்திடும் என்று கூறுவதற்கு இல்லை. மற்றைய மடாதிபதிகள் போல் அல்லாமல்; தாங்கள் M.A. படித்தவர், பத்திரிகை இயல் (Journalism) தெரிந்தவர்; புதுமை நாட்டமும், புரட்சிப் போக்கும் கொண்டவர். இவற்றிற்கும் மேலாக தாங்கள் தமிழகத்தில் பார்ப்பன வெறுப்பினுல் தந்தை பெரியார் துவக்கிய ‘மதச் சீர்திருத்தப் பணி’ அல்லது ‘பகுத்தறிவுப் பணி’ அல்லது ‘புதிய சமுதாயம் அமைக்கும் பணி’ அவரைப் பின்பற்றுகின்றவர்களால் தவருகப் புரிந்து கொள்ளப்பட்டு ‘மத வெறுப்புணர்வும்’, ‘மத மறுப்புணர்வும்’, ‘மத எதிர்ப்புணர்வும்’ தான்தோன்றித்தனமாக வளர்க்கப்பட்டு வருகின்றன என்ற பேருண்மையைப் புரிந்து மதவிழிச்சிக்காக, எழுச்சிக்காக, மறுமலர்ச்சிக்காக, செழுச்சிக்காக, வளவளர்ச்சிக்காக, பெருமைமிகு உரிமைக்காக, உரிய ஆளுமைக்காக ... போராடப் புறப்பட்டிருக்கும் எங்களைப் போன்றவர்களைப் புரிந்து விரும்பி என்றும் எங்களுடன் செயல்படும் பக்குவம் பெற்றுள்ளவர்.

எனவேதான், நீங்கள் தாக்கப்பட்டதாக எண்ணுமல், நமது மத உரிமையும், பெருமையும், ஆளுமையும் தாக்கப் பட்டதாகவே கருதித் தமிழகத்தைப் பொறுத்தவரையிலாவது முழுக்க முழுக்க மதத்தின் அடிப்படையில் ஒரு மாபெரும் இயக்கத்தை வளர்த்தே ஆகவேண்டும். எனவே, நட்புக்கரம் நீட்டி உங்களை அழைக்கிறோம். சிந்தியுங்கள். செயல்படுங்கள்.

20) பேரன்புடையீர்! ‘தனிமரம் தோப்பாகாது’ என்ற பழமொழி தங்களுக்குத் தெரியாததல்ல. நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மதத் தலைவர்கள், புராண இதிகாசச் சொற்பொழிவாளர்கள், சாமியார்கள், சித்து விளையாடல்கள் புரியும் அருளாளர்கள், சோதிடர்கள், மந்திரவாதிகள், பூசாரிகள் முதலியவர்களில் பெரும்பாலானவர்கள் நல்ல செல்வ வளமும், சொல் வளமும், அதிகார வளமும், ஆள்துணை வலிமையும் ... பெற்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் எல்லாம் தனிமரங்களாகவே இருக்கின்றார்கள்.

எனவேதான், நமது தாயகத்தில் மதத்துறை ஒரு பசிய சோலையாகவே காட்சி அளிப்பது இல்லை. அதாவது, நமது மதத்துறை தொலைதூரத்திற்கு ஒரு மரம் என்ற வறண்ட பாலைநிலம் இருப்பது போல் இருக்கின்றது. இதனால்தான், நமது மதம் நாத்திகம், மதவெறுப்பு, மதமறுப்பு என்ற முட்புதர்கள் மிகுதியாக வளர்ந்து பாதையே தெரியாமல் மறைத்துப் பாலைவனக் காட்டுப்பகுதி போல் காட்சி அளிக்கின்றது. இந்த முட்புதர்களை அகற்றுவது மட்டும் நமது நோக்கமல்ல; பலரும் நாடித் தேடி வருகின்ற கனிமலர்ச் சோலையாக நமது மதத்தை மாற்றியே தீரவேண்டும். இதற்கு நம்முடைய மதவாதிகள் (மேலே குறிப்பிட்ட அனைவரும்) ஒன்று கூடிட, ஒற்றுமையோடு செயல்பட்டிட, ஒருங்கிணைந்து வாழ்ந்திட **சித்தர்நெறியெனும் அருமருந்தினால்தான் முடியும்**. இம்மருந்தை வழங்க அறநெறி அருளாளனாக, தெய்வீக மருத்துவனாக என்றே செயல்படத் துவங்கி இலைமறை காயாகவே வாழ்ந்துவரும் எங்கள் குருதேவரைச் சார்ந்து அனைவரும் செயல்படுவதுதான் உரிய வழியாகும். இதனை அறியாமையினாலோ, வெறியினாலோ, அகம்பாவத்தினாலோ, ஆணவத்தினாலோ நான் கூறுவதாக நினைக்க வேண்டாம்.

21) தாய்த் திருநாட்டின் சமயத் துறையின் இளைஞர் சமுதாயத்தின் வாரிசின் சமூகம் அவர்களுக்கு பரிந்துரையாக அனுப்பும் விருந்துரையே அடியேனுடைய இந்த அஞ்சல். இதனை வெற்றுரையாக எண்ணாமல், வீர உரையாக ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்து பரப்பிச் செயலாக்கிப் பத்திமிக்கவர்கள் மட்டுமாவது பயனடையச் செய்யுங்கள். தாங்கள் ஒரு மாபெரும் நிறுவனத்தின் தலைவர்; உங்களுக்குப் பாரம்பரியமாக வரக்கூடிய (மடத்துக்குரிய) பல வளங்களும், வசதிவாய்ப்புக்களும் நிறைய இருக்கின்றன.

எங்களுடைய இயக்கத்திற்கு ஏராளமான சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், விருப்பாளர்கள், நன்றிக் கடனுளர்கள், ... முதலியோர் இருக்கின்றார்கள். ஏனெனில், இம்மண்ணுலகம் உருவாவதற்கு முன்னமே விண்வெளியில் உள்ள அண்டங்களில் உருவான பதினெண்சித்தர்களின் தத்துவங்களும், சித்தாந்தங்களும், செயல்வடிவங்களும் அடிப்படையாகக் கொண்ட மாபெரும் இயக்கமே எங்களது இயக்கம்.

காலங்கள் தோறும் மக்கள் அவலங்களையும், கேவலங்களையும் அனுபவித்துத் தொல்லைப்படும் போதெல்லாம் தோன்றுகின்ற பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் ஒருவரான பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அரசயோகி, ஞானகுரு, வேதகுரு, தேவகுரு, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் தோன்றி நடத்தி வரும் இயக்கம்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

இந்த இயக்கம்தான் அருளை அனுபவப் பொருளாக வழங்கி, மக்களை நாள், கோள், மீன், ஊழ்வினை, விதி, நாகக் கோளாறு (நாகதோசம்), ஆவி, பேய், பிசாசு, மந்திரவாதித் தாக்குதல்

முதலியவற்றிலிருந்து காப்பாற்றி நலமளித்து பாதுகாத்து வருகின்றது. எனவே, இந்த ஒரே இயக்கத்தால்தான் குக்கிராமங்களிலும், கிராமங்களிலும், பட்டிதொட்டிகளிலும், சிறுசிறு கிராமங்களிலும் உள்ள மக்களையெல்லாம் தொட்டு, தட்டி, கிளர்ச்சி பெறச் செய்யமுடியும். அதாவது, இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களை மதத்தின் தேவையையும், பயனையும், வரலாற்றுப் பூர்வமான அரிய பெரிய சாதனையையும், மதம் சார்ந்த தலைவர்களின் பயன்களையும், கலைஞர்களின் பயன்களையும் உணரச் செய்யமுடியும்.

ஏனெனில், மதத் தத்துவங்களால் உருவான நமது அன்றாட நடைமுறை வாழ்வியல்களில்தான் அமைதியையும், அடக்கத்தையும், சமாதானத்தையும், அன்பையும், கனிவையும், பற்றையும், பாசத்தையும், மானுட உணர்வையும் காணமுடிகிறது என்ற பேருண்மையினை எல்லோரும் உணரச் செய்யவேண்டும். நம் நாடு கிராமங்கள் மிகுந்த நாடு என்பதால், கிராமிய மக்களிடம் மத அறிவும், பயிற்சியும், ஆற்றலும், ஆர்வமும், மதவழி வாழ்வில் பற்றும், நம்பிக்கையும், பிடிப்பும், ... முறையாக வளர்ந்து முழுமை பெறச் செய்திட்டால்தான் மதமறுப்புக்களும், வெறுப்புக்களும், நாத்திகங்களும் மூண்டெரியும் பெருநெருப்பில் விழும் தூசிகள் போல் பொசுங்கிட நேரிடும்.

22) ஐயா! எனது குருதேவர் தனது கடலோடி, காடோடி, நாடோடி வாழ்வின் அநுபவங்களாலும், பதினெட்டாண்டு பயிற்சிகளாலும், பதினெட்டாண்டு முயற்சியாலும் பெற்றிட்ட அநுபவங்களாலும்தான் இன்னும் இலைமறை காயாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இருந்தும், என்னைப்போன்ற துடிப்புமிக்க இளைஞர்கள் இவ்வியக்கத்தை அரசுப்பதிவு (கி.பி.1983 சூன் திங்கள், பதிவு எண் 135) செய்துள்ளோம். எங்களுடைய கொள்கைகளையும், குறிக்கோளையும் சுருக்கமாக்கி, சாரமாக்கி எங்களைப் பண்பாட்டு

இயக்கமாக (A Cultural Organisation), பொதுநல நல்வாழ்வு கழகமாக (A Social Welfare Movement) அறிவிப்புச் செய்துள்ளோம். ஆனால், நாங்கள் "அரசியலே கூடாது" என்று கூறவில்லை. எல்லா அரசியல் கழகங்களைச் சார்ந்தவர்களும், எங்களுடைய இயக்கத்தில் இருக்கின்றார்கள்.

**நாங்கள், "மதம்தான் எல்லா அரசியல் கழகங்களின் தலையெழுத்தினை நிர்ணயிக்கின்ற மாபெரும் இயக்கமாக இருக்கமுடியும்; இருக்கக்கூடும்" என்ற மிகத் தெளிவான கருத்துடன் செயல்படுகின்றோம்**. ஆனால், அப்பாவியான மதத் தலைவர்கள் இன்னும் எங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் தங்களுடைய முழு ஆதரவைத் தர மறுக்கின்றார்கள். இது, எங்களுக்கு மாபெரும் வேதனையல்ல; சோதனையே. எனவேதான், தாங்கள் தாக்கப்பட்ட செய்தியை கேட்டவுடன் ஓய்வேயில்லாத நான், ஓய்வை உருவாக்கிக் கொண்டு எம்முடைய குருதேவர் ஒப்புதலைப் பெற்று பெரிதின் முயன்று இந்த விரிவான அஞ்சலை அனுப்புகின்றேன். இதனைப் புரிந்து நீங்கள் செயல்பட வேண்டும். இல்லையெனில், உங்களைப் போன்ற மதவாதிகளுக்கு வருங்காலத்தில் பெரும்பழியே வந்து சேரும்.

23) ஐயா! தாங்கள் உங்களுக்கென்று ஒரு நிறுவனமும், வசதிவாய்ப்புக்களும் இருக்கின்றன என்பதால் தனிமனிதராக அரசாங்கத்தை எதிர்த்துப் போராடத் துவங்கி விடாதீர்கள். <u>அன்னிய ஆட்சியை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கிய வீரபாண்டிய கட்டபொம்மன் தன்னைப் போன்ற சிற்றரசர்களையும், மக்களையும் தனது நோக்கையும், போக்கையும் புரிந்து தன்னுடன் ஒருங்கிணைந்து ஒன்றுதிரட்டிச் செயல்படும்படிச் செய்யாததால்தான் **கயத்தாற்றில்** தூக்கில் தொங்கினான்</u>. எனவே, மதத்துறையில் ஒரு மாபெரும் விழிச்சியை, எழுச்சியை, செழுச்சியை, மலர்ச்சியை உருவாக்குவதற்கு

எங்களைப் போன்றோருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் முடியும். அப்படி இல்லையெனில், உங்களைப் போன்றோருக்கு அரசியல் ஓநாய்களின் வேட்டைக்கு இலக்காகும் வெள்ளாட்டுக் குட்டி போன்ற நிலையே உருவாகிடும்.

இப்படி எழுதுவது இன்றுள்ள அரசியல்வாதிகள் அனைவருமே மோசமானவர்கள் என்ற கருத்தில் அல்ல; ஆனால், அரசியலில் எவ்வளவு நல்லவர்கள் உள்ளனரோ அதைவிடப் பன்மடங்கு நல்லவரல்லாதவர்கள் உள்ளனர் என்ற கருத்திலேயே இதைக் கூறுகிறேன்.

24) ஐயா, நான் தங்களை நேரில் பார்த்த போதே, எங்களைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்த அஞ்சலைக் கண்ட பிறகாவது எங்களைப் பயன்படுத்திக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. இருந்தாலும், மதத் தலைவராகிய தாங்கள் தாக்கப்பட்டதற்கு நாங்கள் குருதிக் கண்ணீர் வடிக்கின்றோம். இந்த அஞ்சல் எங்கள் இயக்க வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த சிறப்பையும், இடத்தையும் பெற்றிடும். விரைவில் இவ்வஞ்சலை சிறு வெளியீடாக அச்சிட்டு வெளியிடுவோம் என உரைத்து இந்த அஞ்சலை முடிக்கின்றேன்.

பதில் கடிதம் நோக்கும்,

அன்பு<br>
சி.கவிக்குமார்<br>
1.7.83

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியான் திரு வெங்கட்டரமணன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**
**(தோற்றம்: கி.பி.1772, பதிவு எண்: 135/1983)**
**தலைவர்: ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர், பொன்னேரி - 601204.**

5.7.1983

**திருவருட்பணிச் செல்வர் மதுரை ஆதீனம் அவர்கள் சமூகத்துக்குக் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் விடுக்கும் பரிந்துரை அஞ்சல்.**

தெய்வீக நிலைகள் திருநிறை பெரும!

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமாகட்டும்! வெற்றியாகட்டும்! உண்மைப் பயன் நல்கட்டும்! வாழ்க நீவிர்! வளர்க நும் பணி!

2) எமது இ.ம.இ.யின் பொருளாளர் அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம் அவர்கள் தாங்கள் தாக்கப்பட்டது குறித்து எமக்கேற்பட்ட அதிர்ச்சியையும், அளப்பரிய வருத்தத்தையும் அழகிய, பொருளாழமிக்க நெடிய அஞ்சலாக வடிவப் படுத்தியுள்ளார். அவரது ஆர்வத்தையும், ஆற்றலையும், செயலூக்கத்தையும் போற்றியே இப்பரிந்துரை அஞ்சல் நல்குகிறோம்.

இவர் ஏற்கனவே அடியார் ஒருவருடன் தங்களை நேரில் கண்டு உரையாடியும் உரிய பயன் விளையாமல் பெரிய ஏமாற்றம் அடைந்தவர். இருப்பினும், உங்களை இ.ம.இ.யில் இணைத்துச் செயல்பட வேண்டுமென்பது இவரது பேரவா. எனவேதான், இந்த அஞ்சல்வழி முயற்சி திறந்த நெஞ்சத்தோடும், சிந்தையோடும் மேற்கொள்ளப் படுகிறது. பொதுவாக நம் நாட்டு மடாதிபதிகள், பீடாதிபதிகள், ஆதீனங்கள், சன்னிதானங்கள், தம்பிரான்கள், சாமியார்கள், அருளாளர்கள், பத்தர்கள் ..... பிறரோடு இணைந்து ஒற்றுமைப்பட்டு ஒன்றுகூடிச் செயல்படும் நோக்கும், போக்கும், ஊக்கும்

அற்றவர்களாகவே இருக்கிறுர்கள். இதற்கோர் அடிப்படைக் காரணம் ‘நம்மிடையில் கூட்டு வழிபாடு இல்லே’ என்பதுதான். இக்குறை கூட ஆதியில் ஏற்பட்டதல்ல. பாதியில் ஏற்பட்டதுதான். எனவே, இதனே முழுமையாக மாற்றிட ஏற்றதொரு பணி நம் காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்கு இம்மண்ணுலகில் இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களின் ஏட்டறிவும், பட்டறிவும்தான் இரு கண்களாக, இரு கைகளாக சத்தி சிவமாகப் பயன்பட முடியும்.

3) இம்மண்ணுலகில் தோன்றிய மணீசர்கள் [மண் + ஈசர் = மணீசர்] பயனடையத் தேவையான பண்பாட்டு முயற்சிகளேப் பதினெண்சித்தர்கள் பைந்தமிழில் இந்துமதமாகப் படைத்தார்கள். இப்படி ‘இளமுறியாக் கண்டத்தில்’ (இளமை மாருத, நிலம் முதிர்ச்சி பெருத காலத்தில் நீருக்கு நடுவில் தோன்றிய நிலப்பகுதி ‘குமரிக்கண்டம்’) பிறந்த ஆதிமொழியான தமிழும், அத் தமிழில் தோன்றிய இந்துமதமுமே உலகம் முழுதும் தட்பவெப்ப நிலேகளுக்கேற்பவும், தேவைகளுக்கேற்பவும் எண்ணற்ற மொழிகளாகவும், மதங்களாகவும் கிளேத்து வளர்ந்துள்ளன.

இவற்றையெல்லாம் விளக்கிட உடனடியாக இந்துமதம் தமிழ்மொழி வழியில் மறுமலர்ச்சி அடைந்திடல் வேண்டுமென்று முடிவெடுத்த சித்தர் கருவூரார் வழிவழி வந்த சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளே அவர்கள் கி.பி.1772இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதன்மூலம், குறிப்பிட்ட சிலருக்கே உரிமைச் சொத்தாக இருந்த சித்தர்நெறித் தத்துவங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், கலேகள், அறிவியல்கள் ..... முதலிய அனேத்தும் ஆர்வமுடையோர்களுக்குக் கற்றுத் தரப்பட்டன. ஆனுல், அவரவர் தங்கள் தங்களின் தரத்திற்கும், திறத்திற்கும், தீரத்திற்கும், திறமைக்கும், வாய்மைக்கும், தூய்மைக்கும் ஏற்பவே இவற்றில் பயிற்சியும், தேர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்றனர்.

எப்படியோ, இந்த இ.ம.இ.யால் கடந்த இரண்டு நூற்றுண்டுக்குள் இம்மண்ணுலகம் முழுதும் பதினெண்சித்தர்களின் அருள்வழியில் உருவான அருளாளர்கள் பல நூறுயிரம் பேர்களாகி விட்டார்கள். ஆனுல்,

ஏறத்தாழ எல்லோருமே மலைமுகடுகளிலும், காடுகளிலும், குகைகளிலும், தவப்பள்ளிகளிலும் தனிமைத் தவத்தில் ஈடுபட்டு இன்பம் காணுவதிலும், இறையோடு இரண்டறக் கலந்து நிறைவு பெறுவதிலும், அமைதியில் நிம்மதியுறுவதிலுமாகவே வாழுகின்றார்கள். எங்கோ சிலர், எப்போதாவது வெளிப்பட்டிட்டாலும் உலகியலைச் சமாளிக்க முடியாமல் விரைவில் இலைமறைகாயாகி விடுகிறார்கள் அல்லது மௌனிகளாகி வாழத் தலைப்பட்டிடுகின்றார்கள்.

நல்லகாலமாக யாமும் அப்படிச் சென்றிடாதபடி எம் தந்தை எம்மை மிகுந்த உலகியல் ஈடுபாடு, மானுட அன்பு, கனிவு, இரக்கம், அருள், அழகுணர்வு, தோழமை, நட்பு, உறவு, உரிமை, பற்று, பொறுமை, பொறுப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுங்கு, நீதி, நேர்மை, வாய்மை, துய்ப்பாற்றல், உய்வுநாட்டம், காதல், பாசம், ... முதலிய இயல்புகளை வளமாகச் செழித்தோங்கும் வண்ணம் வாழப் பயிற்சிகள் வழங்கி விட்டார். எனவேதான், முப்பதாண்டு காலமாக முயன்றும் உண்மையான தமிழ்ப்பற்றும், ஆர்வமும் உள்ளவர்கள் கிடைக்காத போதும்; எண்ணற்ற நூல்கள் எழுதப்படாமலும் அச்சேறாமலும் ..... அழிய நேரிட்ட போதும்; பொறுமையோடு ‘தமிழ் வாழ்க’ என முழங்கித் தமிழ் வளர்க்கும் பணியைச் செய்து வருகிறோம். யார் யாரோ எப்படியெப்படியோ ‘தமிழ் வாழ்க’ என்ற முழக்கத்தின் பயனை அறுவடை செய்து வாழுகிறார்கள். எல்லாம் திருவிளையாடலே.

இன்றைய இளைஞர் சமுதாயம், இனியும் நாம் அருட்சினை மண்டபங்களிலோ, அருளூறு பூசைநிலைகளிலோ, ஆழ்தவத்திலோ ... ‘நல்லவர்கள் நாடாள வேண்டும்’ என்று வேண்டுவதில் பயனில்லை. நாமே அருளாட்சி முயற்சியை மேற்கொள்ள வேண்டும் - என்று வலியுறுத்தி எம் ஒப்புதலோடு செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். அநேகமாக வருகிற தேர்தலில் நல்ல பத்தர்கள்! சிறந்த மதவாதிகள்! [போன்றோரை] நேரடியாக ஆதரித்து அரசியலில் அருளுலக செல்வாக்கை உணர்த்த எமது இ.ம.இ. முற்படும். இந்த அவசர அவசிய முடிவு

தங்களுக்குத் திருச்செந்தூரில் ஏற்படுத்தப்பட்ட அவமானமும், மதுரையில் கொடுக்கப்பட்ட எதிர்ப்பும், தொல்லேயும் அடிப்படையாகக் கொண்டு வீறுபெற்று விரைவுபடுத்தப்பட்டு வலிவடைகிறது, விரிவடைகிறது. எனவே, தாங்கள் இந்த இளேஞர் சமுதாயத்தை, அருளாளர் திருக்கூட்டத்தை, ஆர்வமிகு அரிமாக்களே, ஆற்றல்மிகு வேங்கைகளே உரிய வண்ணம் போற்றிச் சமயப்பணி ஆற்றிடல் வேண்டும் என்று பரிந்துரைக்கிருேம் யாம்.

**இதுகாறும் நாடாள வந்தவர்களில் நல்லவர்கள் இருக்கத்தான் செய்கிருர்கள். ஆனுல், அவர்கள் வல்லவர்களாக இல்லே. இதேபோல்தான் <u>நாடாளுபவர்களில் வல்லவர்கள் நல்லவர்களாக</u> இல்லே**. இந்நிலே மாறி வல்லமைமிக்க நல்லவர்கள் நாடாள வேண்டுமேயாஞல் நமது மதத் தலேவர்களும், மத இயக்கங்களும் உடனடியாக அரசியலில் ஈடுபட்டேயாக வேண்டும். <u>மீன் நீர்நிலேகளேச் சுத்தப்படுத்துவது போல், அருளாளர்களால்தான் அரசியல் துறை தூய்மையும், வாய்மையும் பெற்று உய்வடைந்திடும்</u>. இவற்றை எண்ணித் தங்களேப் போன்ற மதத் தலேவர்கள் செயல்பட வேண்டுமென்ற கருத்தை மட்டும் வலியுறுத்தி இப்பரிந்துரையை நிறைவு செய்கிருேம்.

ஓம் திருச்சிற்றம்பலம்!
தென்ஞடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

அன்பு
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
5/7/83.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவின் சிறப்பு

இம்மண்ணுலகில் ஆதிசிவனாருக்கு அடுத்து தோன்றிய பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் தங்கள் தங்கள் காலத்தில் இந்தப் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவைத் தோற்றுவித்து இம்மண்ணுலகில் 1. மடாதிபதி, 2. பீடாதிபதி, 3. சன்னிதானம், 4. ஆதீனம், 5. தம்பிரான், 6. பண்டாரம், 7. பண்டார சந்நதி, 8. பண்டார சந்நிதி, 9. அரியவாள், 10. கூரியவாள், 11. சீரியவாள், 12. பெரியவாள், 13. நேரியவாள், 14. வீரியவாள், 15. ஏமகோடிப் பீடம், 16. காமகோடிப் பீடம், 17. சோமகோடிப் பீடம், 18. வாமகோடிப் பீடம் ... என்று பதினெட்டுப் பட்டங்களுக்குரியவர் இந்துமத இந்தியாவின் ஏதேனும் ஒரு மூலை முடுக்கிலாவது வாழும்படி செய்துள்ளார்கள்.

அதாவது, பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதிகள் தோன்றும் போதுதான் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவில் உள்ள பதினெட்டு அருட்பட்டத்தவர்களும் தோற்றுவிக்கப் படுகின்ற பணிகள் நிகழுகின்றன. எனவே, கடந்த நான்கு யுகத்தில் இந்த பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தவிர ஆரம்பக் காலத்தில் ஆதிசிவனார் தோற்றுவித்தது போல் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும் வேறு யாரும் உருவாக்கியதில்லை, உருவாக்கியதில்லை, உருவாக்கியதில்லை. உருவாக்க முடியவில்லை, உருவாக்க முடியவில்லை, உருவாக்க முடியவில்லை என்பதுதான் உண்மை, உண்மை, உண்மை.

எனவேதான், **தமிழர்களாக உள்ள பதினெண்சித்தர்கள் உருவாக்கிய இந்துமதத்திற்கு பதினெண்சித்தர் பீடாதிபதிகளாகத் தோன்றுபவர்கள்**

**மட்டுமே இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், குவலய குருபீடம், அருதி ஆதிகடந்த தம்பிரான், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், ... எனப்படுகின்ற நூற்றுத் தொன்னூற்றிரண்டு அருட்பட்டங்களுக்கு உரியவராகிறார்கள். அருட்பட்டங்களுக்கு உரியவராகிறார்கள், அருட்பட்டங்களுக்கு உரியவராகிறார்கள்.**

இவற்றில் எந்த ஓர் அருட்பட்டத்தையும் இந்துமதத்தின் பெயரால் வாழும் எந்த ஒரு மடாதிபதியோ, பீடாதிபதியோ, ஆச்சாரியாரோ, சன்னிதானமோ, ஆதீனமோ, தம்பிரானோ, பண்டாரமோ, ... அடுத்தவருக்கு வழங்க முடியாது, வழங்க முடியாது, வழங்க முடியாது, வழங்கவே முடியாது. ஏனென்றால், இன்றைக்கு இந்துமதத்திலுள்ள மேற்படி பட்டத்துக்குரிய அனைவருமே ஏதாவது ஒரு பதினெண்சித்தர் பீடாதிபதியால் உருவாக்கப் பட்டவர்களே தவிர, வேறு அல்ல. ..... ..... .....

அதாவது இந்துவேத நாயகமாகவும், இந்துமதத் தந்தையாகவும், இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராகவும் விளங்குகின்ற பதினெண்சித்தர் பீடாதிபதிகளால்தான் அருளுலகைப் பாதுகாக்கக் கூடிய, நிலைநிறுத்தக் கூடிய முறையாகவும், நிறைவாகவும் செயல்படச் செய்கின்ற பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டுவகை அருட்பட்டத்தவர்களையும் உருவாக்க முடியும், உருவாக்க முடியும், உருவாக்க முடியும் என்ற பேருண்மை நிலைநாட்டப் படுகிறது. ஏனென்றால், இந்த பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டுப் பேர்கள்தான் நாட்டு நடப்பில் கோவில் (கோயில்) என்ற ஒரு பொதுச் சொல்லால் குறிப்பிடக் கூடிய அனைத்துவகைப் பட்ட கடவுள்களின் வாழிடங்களையும் பாதுகாத்து பத்தி, சத்தி, சித்தி, முத்தி முதலியவைகளை வளர்க்கும்படிச் செய்ய முடியும்.

எனவேதான், கடந்த நான்கு யுகங்களில் முதன்முதலில் ஆதிசிவனார் உருவாக்கிய மடாதிபதிக் குழுவை என்றென்றும் நிலைநிறுத்திச் செயல்பட வேண்டும் என்பதற்காக அவருக்கு அடுத்துத் தோன்றிய **சித்தர் கருவூரார் வழிவந்த** பதினோரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் இந்தப் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும் நூறாயிரக் கணக்கில் தோற்றுவித்துக் கொண்டே வந்துள்ளார்கள். இருந்தும், இன்றைக்கு நாட்டில் இந்தப் பதினெட்டுவகை அருட்பட்டத்தவர்களில் ஒரு சில அருட்பட்டத்துக்குரியவர்கள் மட்டுமே (மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், ஆச்சாரியார் ... ) உலகறிய வாழுகிறார்கள். கணிசமான எண்ணிக்கைக்குரிய பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவைச் சேர்ந்த அருட்பட்டத்தவர்கள் இலைமறை காயாக காடுகளிலும், குகைகளிலும், மலைமுகடுகளிலும் மறைந்து உறைந்து வருகிறார்கள்.

எனவேதான், **இப்போது அருட்போர் ஆயத்தப் பணிகள் துவங்கி விட்டதால் (ஆரம்பித்து விட்டதால்); அதனுடைய சிறந்த செயல்பாட்டுச் சாதனமாக பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவை நாடெங்கும் உருவாக்குமாறு அருளாட்சி நாயகமான அண்டபேரண்ட அருட்பேரரசர் தஞ்சைத் தாத்தா அவர்கள் அருளாணை வழங்கி யிருக்கிறார்கள். எனவேதான், பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவை நாடெங்கும் அமைக்கும் பணி இந்து முன்னேற்றக் கழகத்தின் (இ.மு.க.) முழுமுதல் செயல்திட்டமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது**.

..... ..... .....

**//உண்மை நகல்//**

**//25/08/1992இல் குருதேவர் அவர்கள் எழுதிய 'அருட்போர் ஆயத்தப் பணி அருளாணை' அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட சில பத்திகள்.//**

இளந்தென்றலே! மலர் மணங்கமழ வந்திடு!
இளம்பிறையே கவர்ச்சிமிகு ஒளி வழங்கிடு!
நீலவானத்து வெண்மேகமே கோலவடிவு காட்டிடு!
அருவியே இனிய சிரிப்பொலி என்று மெழுப்பிடு!
ஓடைநீரே அசைநடை இசைவோடு வழங்கிடு!
பசிய புல்வெளியே என் நெஞ்சு பாடிக் கோலமிடு!
இளஞாயிறே கனிவான கதகதப்பைக் காத்துத் தந்திடு!
கவலைகளையும் களைப்பையும் அகற்றும் மருந்துகளாகுக
நீவிர்!

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்**

எழுதப்பட்ட நாள்: புதன் 11/2/87, நேரம் 11:15.

**//உண்மை நகல்//**

**//சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்கள் குருதேவருடன் தலைமைப்பீடத்தில் இருந்த போது எழுதிக் காத்திட்ட குறிப்பேட்டில் இருந்து எடுக்கப்பட்டது.//**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். **இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலகுருவாகவும், அரசரில்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் 'சிறுபள்ளி', 'பெரும்பள்ளி' என்ற கல்விக் கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார்.**

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞானகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**
www.books.gurudevar.org